**16. 10. 2025 - 1.45 PM**

வணக்கம். ஆகாஷவாணி

மாநில செய்திகள் வாசிப்பவர் சாந்தி ரமேஷ்

<u>தலைப்பு செய்திகள்</u>

1. ஆந்திரபிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

2. ஊழல், தீவிரவாதம், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்ட முன்வடிவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

4. தமிழ்நாட்டில் 4 இடங்களில் உள்ள சிறுநீரக உறுப்புமாற்று ஆணையம் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் சட்டப்பேரவையில் கூறியுள்ளார்.

5. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது.

17 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. (இனி விரிவான செய்திகள்)

நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது

ஆகாஷவாணியின்

மாநில செய்தியறிக்கை

<u>பிரதமர்</u>

ஆந்திரபிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

தொழிற்சாலைகள், மின்பகிர்மானம், சாலைகள், ரயில்வே, ராணுவ தளவாட உற்பத்தி, பெட்ரோலியம், இயங்கை எரிவாயு பிரிவுகளில் பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

இந்த திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக இன்றுகாலை கர்னூல் வந்தடைந்த பிரதமர், நந்தியால் மாவட்டம் ஸ்ரீசைலம் பிரம்மாரம்ப மல்லிகார்ஜுன சுவாமி தேவஸ்தானத்தில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

## அமித்ஷா

ஊழல், தீவிரவாதம், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மத்திய புலனாய்வு முகமை சார்பிலான 2 நாள் மாநாட்டை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், வெளிநாடுகளிலிருந்து நம்நாட்டிற்குள் தீவிரவாத செயல்கள் புரிவோரை, சட்டத்திற்கு முன் நிறுத்துவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

நாட்டில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் நடைமுறையில் உள்ள நிலையில், சர்வதேச காவல்துறையினரை ஒருங்கிணைக்கும் பாரத்போல் இணையதளத்தின் மூலம் குற்றவாளிகள் எங்கிருந்தாலும் அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் நாட்டின் எல்லை பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன் சட்ட வழிமுறைகளும் வலுப்படுத்த பட்டுள்ளதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

பொருளாதார குற்றவாளிகள், சைபர் குற்றவாளிகள், பயங்கரவாதிகள், அமைப்பு சார்ந்த தளத்தை சேர்ந்த உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சட்டத்திற்கு முன் குற்றவாளிகள் நிறுத்தப்பட்டு நீதியியல் நடவடிக்கைகள் மேற்கொள்ள படவேண்டும் என்று திரு. அமித்ஷா வலியுறுத்தினார்.

## ஜெய்சங்கர்

தீவிரவாதம், பொருளாதார சவால்கள், காலநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர்கொள்ள ஐ.நா.படை பங்களிப்பு நாடுகளின் ஒத்துழைப்பை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் ஐ.நா. பங்களிப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், எல்லைத்தாண்டிய பிரச்சனைகளால் சவால்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நீதி, மாண்பு, வாய்ப்புகள், சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் வளம் என்பதை நோக்கமாக கொண்டு இந்தியா செயலாற்றுவதாக எடுத்துரைத்த அமைச்சர், உலக அமைதியை நிலைநாட்ட இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எடுத்துரைத்தார்.

இதனிடையே இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமர், ஹரினி அமரசூர்யா உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

கல்வி, திறன் மேம்பாடு போன்றவற்றில் இலங்கைக்கு, இந்தியா வழங்கும் தொடர் ஆதரவு குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

## எகிப்து

2 நாள் அரசுமுறை பயணமாக இந்தியா வந்துள்ள எகிப்து வெளியுறவுத்துறை அமைச்சர்
திரு. பத்ர் அப்தலாட்டி, பிரதமர் திரு.நரேந்திரமோடி உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

புதுதில்லியில் நடைபெறும் முதலாவது இந்திய - எகிப்து உயர்நிலை பேச்சுவார்த்தைகளிலும் அவர் கலந்துகொள்கிறார்.

பிராந்திய மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து இதில் விவாதிக்கப்படுவதுடன் இருநாடுகளின் அரசியல் ரீதியிலான நட்புறவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளும் இதில் இடம்பெறும்.

திரு. பத்ர் அப்தலாட்டி வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

<u>சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் வெளியான சில தகவல்கள் :</u>

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தொகுதி நம்பறை ஊராட்சி மோகனாவரம் விளாரி கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

மதுரையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில், புதிதாக கட்டப்படும் கோரிப்பாளையம் அப்பல்லோ மருத்துவமனை பாலங்கள், மதுரை பாத்திமா கல்லூரி அருகில் அமைக்கப்படும் புறவழிச் சாலைகளின் பணி வரும் ஜனவரி மாதம் பயன்பாட்டிற்கு வரும் என்று மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கூறினார்.

தமிழ்நாட்டில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 4 மாநகராட்சிகளில் இணைக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு பாதாள சாக்கடை மற்றும் எல்.இ.டி. விளக்குகள் வசதி செய்து கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு குறிப்பிட்டார்.

நிலக்கோட்டை பேரூராட்சியில் புறவழிச்சாலையில் இடம் கிடைத்தால் மட்டுமே புதிய பேருந்து நிலையம் நவீன வசதியுடன் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

திருத்துறைபூண்டி தொகுதி கோட்டூரிலிருந்து சென்னைக்கு அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் நேரடி பேருந்து சேவை விரைவில் தொடங்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

புதுக்கோட்டை தொகுதி திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் திருக்கோவிலுக்கு வரும் ஜனவரி 26-ம்தேதி குடமுழுக்கு நடைபெறும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

.. .. ..

<u>ச.பே. – மா.சு</u>

தமிழ்நாட்டில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை முறைகேடுகள் தொடர்பாக பாகுபாடு இல்லாமல் 2 தனியார் மருத்துவமனைகளின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்மணியன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் எதிர்கட்சித்தலைவர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி உள்ளிட்ட உறுப்பினர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு விளக்கமளித்த

அமைச்சர், இடைத்தரகர்கள் 2 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 4 இடங்களில் உள்ள சிறுநீரக உறுப்புமாற்று ஆணையம் மறுசீரமைக்கப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

முறைகேடுகள் தொடர்பாக அரசு அதிகாரிகள் 7 பேர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றும் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்தார்.

<u>முதலமைச்சர்</u>

ஆளுநரால் சில குறிப்புகளுடன் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்டமுன்வடிவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

இச்சட்டமுன்வடிவு உட்பட டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக திருத்த மசோதா,

ஊராட்சி தலைவர்களின் பதவிக்காலத்தை வரும் ஜனவரி 5-ம் தேதிவரை நீட்டிக்க வகை செய்யும் உள்ளிட்ட 7 மசோதாக்கள் பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டன.

<u>வீரபாண்டிய கட்டபொம்மன்</u>

சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் 226-வது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது

ஆங்கிலேயர்களின் வரி விதிப்பு முறைக்கு எதிராக போராடிய கட்டபொம்மனின் தியாக உணர்வை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் நினைவுகூர்ந்தார்.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில் சிப்பாய் புரட்சிக்கு பல ஆண்டுகள் முன்னரே விடுதலை போராட்ட உணர்வை பரவச்செய்து உறுதிகுலையாமல் போராடி உயிர்துறந்த கட்டபொம்மனின் தியாகம் என்னென்றும் போற்றப்படும் என்றார்.

இந்நாளையொட்டி சென்னை கிண்டி காந்தி மண்டபம் வளாகத்தில் கட்டபொம்மனின் திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

<u>போனஸ்</u>

தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் வழங்க தமிழக அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கப்படும் உபரி தொகையை கணக்கில் கொண்டு பணியாளர்களுக்கு 20 சதவிகிதம் வரையிலும்,

உபரித்தொகை இல்லாத சங்கங்களில் பணியாளர்களுக்கு 10 சதவிகித போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உதயநிதி

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத்தொகை பெற புதிதாக விண்ணப்பித்தவர்களில் தகுதியுடையவர்களுக்கு வரும் டிசம்பர் 15-ம் தேதிமுதல் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் 28 லட்சம் பெண்கள் புதிதாக விண்ணப்பித்துள்ள நிலையில் ஆய்வு பணிகள் அடுத்தமாதம் இறுதிக்குள் நிறைவுபெற்று உரிமைத்தொகை வழங்கப்படும் என்றார்.

## எல்.முருகன்

உள்ளூர் உற்பத்தி பொருட்கள் மற்றும் சுயசார்பு பாரதம் மூலம் சுதேசி இயக்கத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி உத்வேகம் அளித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

1905-ம் ஆண்டு சுதேசி இயக்கத்தின் மூலம் தற்சார்பு இந்தியாவிற்கான உணர்வும், தேசத்தின் பெருமையும் நிலைநாட்டப்பட்டதாக எடுத்துரைத்தார்.

தற்போது சுயசார்பு பாரதம் கைவினைஞர்களுக்கு ஆளுமை வழங்கி, வளர்ச்சியடைந்த பாரத பாதையை வலுப்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

சுதேசி இயக்கத்தில் பங்கேற்று அளப்பறிய சேவையாற்றிய விடுதலை போராட்ட வீரர்களை இன்று நினைவுகூர்வதாக குறிப்பிட்டார்.

## சிறப்பு பேருந்துகள்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாநிலம் முழுவதும் இன்றுமுதல் 4 நாட்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

சென்னையிலிருந்து வழக்கமாக இயக்கப்படும் 2 ஆயிரத்து 92 பேருந்துகளுடன் 760 சிறப்பு பேருந்துகளும் பல்வேறு இடங்களிலிருந்து 565 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

## நிர்மலா

நாட்டில் விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் ஜவல்கெரா கிராமத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாமை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள், உரங்கள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் நலத்திட்ட உதவிகளை வழங்கிவருவதாக குறிப்பிட்டார்.

பல்வேறு வகையான உணவு தானிய பொருட்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டதையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

<u>பருவமழை:</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்திருக்கிறார்.

... வாய்ஸ் ...

இதனிடையே திருவாரூர், மதுரை, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் இன்றுகாலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

தூத்துக்குடியில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் நாளை முதல் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெறும் என்றும் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 4 ஆயிரத்து
500 கனஅடி வீதமும், புழல் ஏரியிலிருந்து 500 கனஅடி உபரிநீரும் வெளியேற்றப்படுகிறது.

கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 9 ஆயிரத்து 500 கனஅடியாக குறைந்துள்ளது.

<u>விருதுநகர்</u>

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விருதுநகர் மாவட்டம் தோணுகால் ஆட்டுச்சந்தையில் 3 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ...

<u>கிரிக்கெட்</u>

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை பெர்த்தில் நடைபெறுகிறது.

சுப்மன்கில் தலைமையிலானா இந்திய அணியில் விராட்கோல், ரோஹித் ஷர்மா உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

<u>பேட்மிட்டன்</u>

டென்மார்க் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் லக்ஷயா சென் – டென்மார்க்கின் ஆண்டர்சென்னை இன்று எதிர்கொள்கிறார்.

இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை – சீன தைபே இணையுடன் இன்று பிற்பகல் மோதுகிறது.

<u>மீண்டும் தலைப்பு செய்திகள்</u>

1. ஆந்திரபிரதேச மாநிலம் கர்னூலில் 13 ஆயிரத்து 430 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

2. ஊழல், தீவிரவாதம், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு எதிராக எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உறுதிபட தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்ட முன்வடிவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

4. தமிழ்நாட்டில் 4 இடங்களில் உள்ள சிறுநீரக உறுப்புமாற்று ஆணையம் மறுசீரமைக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் சட்டப்பேரவையில் கூறியுள்ளார்.

5. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது.

17 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது